ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2251/37 - 2021 ඔක්තෝබර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.10.28

2251/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 சனவரி மாதம் 29 ஆந் திகதிய 2212/53 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2021 சனவரி மாதம் 28 ஆந் திகதி தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய 2021 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி முடிவுறும் மூன்றுமாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2021 ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 2225/48 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2021 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து ஆறு மாதங்களினால், அதாவது 2021 ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டதுடன், மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட அதிகாரத்தின் வண்ணம் ஆறு மாதங்களினால், அதாவது 2022 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

கோட்டாபய ராஜபக்ஷ,
சனாதிபதி

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2021, ஒற்றோபர் 28.

1A - G 34916 — 370 (2021/10)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*